**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 415/2014 |
| Deposition Of Witness for | Prosecution PW 7<br>Defense<br>Court |
| Name | டாக்டர். ஷியாம் சுந்தர் சிங் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of November 2022.

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் உறைவிட மருத்துவராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது 02.11.2010 அன்று பிற்பகல் 01.15 மணியளவில் மாணிக்கம் வயது 43/10, ஆண் நபரை அவருடைய உறவினர் மாரிமுத்து சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் தன்னை 02.11.2010 அன்று அவரது வீட்டில் வைத்து அடையாளம் தெரிந்த 4 நபர்கள் கம்பால் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக கூறினார்.

அவருக்கு கீழ்கண்ட காயம் காணப்பட்டது 1) இடது முன்கை மற்றும் இடது கை மணிகட்டில் வீக்க காயம் காணப்பட்டது. அவருக்கு நுண்கதிர் படம் எடுத்து பார்த்ததில் அவருக்கு இடது முன்கையில் எலும்பு முறிவு காணப்பட்டது. சிகிச்சை முடிந்து 10.11.2010 அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

அதனடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். அந்த காயசான்றிதழ் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

மேற்கண்ட காயம் சொன்ன தேதிக்கு ஒரு நாள் முன்பாக ஏற்பட வாய்ப்புள்ளது. தடுமாறி கீழே விழுந்தாலும் ஏற்பட வாய்ப்புள்ளது. பொதுவாக நுண்கதிர்படம் 10 வருடம் மேலாக பராமரிப்பது கிடையாது.

**மறு விசாரணை இல்லை**